## 34. திருக்கருணைப்பிணக்கம்.

*பண் - பழம்பஞ்சுரம்.*

**ம**ண்டலம் விண்டல மேத்த மாதர் மயலே கொளுங்குறத்தி
கொண்ட மணாள ரரும்பொன் வேலர் குறள்கள் பலகோடி
தெண்ட னிடுஞ்சிகி யீசர் நல்கு திருவிற் சிறிதுகொளின்
பிண்ட முடையநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 1

**ஆ**ச்சரி யத்திருக் கூத்தி னாலய னங்காப் பீறுதிரை
ஏச்சி லனுக்கிரக மென்னு மைந்து மிழைக்கு மயூரேசர்
பூச்சர மொய்ம்பவிர் செவ்வே ணல்கு பொறியிற் சிறிதுகொளின்
பேச்சடங் காதநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 2

**சீ**ரிய மாதர்க ளொன்று கூடிச் சிலம்பணி தாள்வணங்கிக்
கோரிய மோவுற வாண்டு கொண்ட குமார குருபரனார்
பாரினி லேயருள் கூர்ந்து நல்கு பவுள்சிற் சிறிதுகொளின்
பேரறி வற்றநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 3

**கா**ழடி மேலெழிற் றண்டை வீரக் கழல்க ளோலிடமா
மாழைகொள் கேகய மீது சாரி வருங்கு மாரகுரு
ஊழிக லோயவுள் ளுள்ளி யீயு முவப்பிற் சிறிதுகொளின்
பேழறி வற்றநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 4

---

**3. கோரஇயம்** – *"கோரியம்" எனப் பொருந்திற்று. அச்சந்தரத்தக்க ஒலி எனும் பொருளது.*

**ஆ**றிளஞ் சந்திரன் கொக்கி னிறைகொ ளலங்கா ரத்தலையோ
டேறு நடத்திடுஞ் சம்பு மைந்த ரிருஞ்சே வற்கொடியார்
ஈறறு பேரரு ளானல் கமுத வின்பிற் சிறிதுகொளின்
பேறடை யாதநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 5

**செ**த்தவர் சேரிடஞ் சென்றி டாது சிவானந் தம்பெறுவோர்க்
கத்த னருட்டிரு மேனி கொண்டரு ளாறு மாமுகவேள்
சித்த மகிழ்ந்தளிக் கின்ற தெய்வத் திருவிற் சிறிதுகொளின்
பெத்த முடையநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 6

**சீ**தரன் பங்கய னீரைஞ் ஞூறு திட்டி யன்சசிவீ
சாதவன் மண்மகன் மந்தன் பொன்னு மகிக ளரிபுகருங்
காதலி னேத்திடு கந்த வேள்செய் களிப்பிற் சிறிதுகொளின்
பேத மறாதநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 7

**வி**ரிதிரை வாரிதி சூழ்கி டக்கு நிலத்தில் வேதநெறி
திரிபு படாவகை செய்த யோகர் தினமுந் தொழுதணைந்த
பரிவுடைச் சண்முக நாதர் நல்கு பவுள்சிற் சிறிதுகொளின்
பெருமை பெறாதநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 8

**சா**தி குணம்பெயர் குட்டை நெட்டை சனிப்பு நாப்பணந்தம்
ஆதி யவத்தையி லாம லுள்ள வகண்ட குமாரேசர்
போத மகிழ்ந்தளிக் கின்ற தெய்வப் பொறியிற் சிறிதுகொளின்
பீதி விடாதநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 9

**ம**றந்தரிப் புற்றுளிர் தேடி நாடி மருவி யிப்புவியில்
இறந்துதிக் கின்றதை நீத்தி ருமினென் றேசில் புகழ்பாடிச்
சிறந்தவன் றம்பிரா னான கந்தர் திருவிற் சிறிதுகொளின்
பிறந்தலுத் திட்டநம் மோடு சிறிது பிணங்கிக் கொள்வாரே. 10

மன்மத வருடம் ஆவணி மாதம் 24ஆம் தேதி ஆதித்தவாரம்.